Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், அக்டோபர் 15, 2024 | இதழ் 185

# வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவடைந்தது வெளுத்து வாங்கிய கனமழை: சென்னை வெள்ளக் காடானது சென்னை, காஞ்சிபுரம் உட்பட 4 மாவட்டங்களுக்கு ‘ரெட்’ அலர்ட்

*சென்னை, 15 அக் 2024:* வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக வலுவடைந்து இருக்கிறது.

இதனால் சென்னை மற்றும் புறநகர் பகுதிகள், திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களில் 24 மணி நேரத்திற்கு அதிகனமழை (ரெட் அலர்ட்) எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் மழை படிப்படியாக அதிகரிக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழையின் துவக்கமாக தென் கிழக்கு வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக இன்று காலை வலுப்பெற்றுள்ளது. வட தமிழகம் மற்றும் தெற்கு ஆந்திரம் இடையே கரையை நோக்கி நகரக் கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மழை கொட்டி வருகிறது. சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நேற்று இரவு முதல் இடி, மின்னலுடன் கனமழை பெய்து வருகின்றது.

சென்னை சுற்றுவட்டார பகுதிகளில் பரவலாக மழை கொட்டி தீர்த்து வருகிறது. மழை பாதிப்புகளில் இருந்து மக்களை காக்கும் வண்ணம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.

மழையால் சாலைகளில் தேங்கும் நீரை, மாநகராட்சி ஊழியர்கள் உடனடியாக அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஒவ்வொரு மண்டலத்திற்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், அடையார், சைதாப்பேட்டை, கிண்டி, பட்டினப்பாக்கம், தேனாம்பேட்டை, தி.நகர், அமைந்தகரை, மயிலாப்பூர், மந்தைவெளி என பல பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

வெளுத்து வாங்கும் கனமழையால் சாலைகளில் நீர் தேங்கி காணப்படுகிறது. பல இடங்களில் வாகனங்கள் தேங்கிய நீரில் மெதுவாக செல்கின்றன. பல்வேறு பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

மேடவாக்கம் பிரதான சாலையில் மழைநீர் குளம் போல் தேங்கியுள்ளதால், வாகனங்கள் விரைந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சென்னை வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது.

சென்னை ஓஎம்ஆர் சாலையில் முழங்கால் அளவுக்கு சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் தண்ணீர் தேங்கி உள்ளது. மெட்ரோ ரெயில் பணி மற்றும் மழை நீர் தேங்கி இருப்பதால் அந்த பகுதியில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. பஸ், கார்கள் மெதுவாக ஊர்ந்து செல்கின்றன. பாதி வழியில் மோட்டார் பைக்குகள் நின்றதால் அதனை தள்ளியபடியே நடந்து சென்றனர். எஸ்.ஆர்.பி. டூல்ஸ் முதல் கந்தன்சாவடி வரை வாகனங்கள் அணிவகுத்து செல்கின்றன.

பட்டாளம், பாரிமுனை பகுதி சாலைகளில் மழைநீர் தேங்கி உள்ளதால், பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளானார்கள். பட்டாளத்தில் இடுப்பளவு தண்ணீர் உள்ளது. எனவே மக்கள் மிகவும் அவதிப்பட்டனர்.

வடபழனி 100 அடி சாலையில் மழை நீர் தேங்கி நின்றதால் வாகன ஓட்டிகள் பெரும் அவதி அடைந்தனர். சுமார் 5 அடிக்கு நீர் தேங்கி இருப்பதால் கே.கே.நகர், வடபழனி செல்வோர் சிரமம் அடைந்தனர். அரும்பாக்கம் முதல் கோயம்பேடு வரை போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

சென்னை போயஸ் கார்டன் பகுதியிலும் மழை நீர் சூழ்ந்துள்ளது. இதனை அகற்றும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.



வேளச்சேரியில் பல இடங்களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. நேருநகர், காமராஜர் தெரு, நேதாஜி ரோடு உள்ளிட்டப் பகுதிகளில் தற்போதே இடுப்பளவுக்குத் தண்ணீர் தேங்கியிருக்கிறது. இதனால், மக்கள் சாலைகளில் நடந்து செல்லவும், வாகனங்களை ஓட்டிச்செல்லவும் இயலாமல் அவதியடைந்துள்ளனர்.

சாலையில் செல்லும் கார்கள் பாதியளவுக்கு மேல் மூழ்கும் சூழ்நிலையும் தாழ்வான குடியிருப்புகளில் தண்ணீர் சூழும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம், செம்பரம்பாக்கம் ஏரிக்கு வெள்ள நீர் செல்லும் கால்வாயில் அடைப்பு ஏற்பட்டிருப்பதே என்று கண்டறியப்பட்டுள்ளது. அதாவது, சென்னை செம்பரம்பாக்கம் ஏரிக்கு வெள்ள நீர் செல்லும் பங்காரு கால்வாயில் அடைப்பு ஏற்பட்டிருப்பதால், இந்தப் பகுதிகளிலிருந்து மழைநீர் வெளியேறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. பங்காரு கால்வாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால், 5க்கும் மேற்பட்ட ஜேசிபி யந்திரங்கள் கால்வாயில் அடைப்பை சரி செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. செம்பரம்பாக்கம் ஏரிக்கு பங்காரு கால்வாய் வழியாகத்தான் 50 கிராமங்களில் பெய்த மழை நீர் செல்லும் என்பதால் வேளச்சேரியில் தண்ணீர் வடிய வழியில்லாமல் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

சென்னையில் கனமழை பெய்யும் என்று எச்சரிக்கை வந்த உடனேயே வேளச்சேரி பகுதியில் வசிக்கும் மக்கள் தங்களது வாகனங்களை வேளச்சேரி மேம்பாலத்தில் நிறுத்தி உள்ளனர். இந்த நிலையில் இன்னும் ஒருபடி மேலே போய் அப்பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிக்கும் மக்களில் சிலர் பார்கிங்-ல் இருக்கும் இரு சக்கர வாகனங்களை லிப்ட் மூலம் ஒவ்வொரு மாடியிலும் உள்ள தங்கள் வீட்டு வாசலில் நிறுத்தி வைத்துள்ளனர்.

கடந்த ஆண்டு மழையில் சாலைகளில் இடுப்பளவுக்கு தண்ணீர் தேங்கியது மட்டும் அல்லாமல் பல ஆயிரம் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால் பல்லாயிரம் கார்கள், பைக்குகள் மழை வெள்ளத்தில் மூழ்கியது. பல கார்கள் மழை வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டது. இப்படியிருக்கும் சூழ்நிலையில் மக்கள் தங்கள் வாகனங்களை பாதுகாக்க இவ்வாறு செய்துள்ளனர்.

தொடர் கனமழை காரணமாக சென்னையில் 5 சுரங்கப் பாதைகள் மூடப்பட்டுள்ளன.

மழைநீர் வெள்ளம் காரணமாக மூடப்பட்டுள்ள சுரங்கப் பாதைகள், வெள்ளம் சூழ்ந்துள்ள சாலைகள் குறித்து போக்குவரத்து காவல்துறை அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த வகையில் பெரம்பூர் ரெயில்வே சுரங்கப்பாதை,

கணேசபுரம் சுரங்கப்பாதை, சுந்தரம் பாயின்ட் சுரங்கப்பாதை, துரைசாமி சுரங்கப்பாதை, மேட்லி சுரங்கப்பாதைகள் மூடப்பட்டுள்ளன.

மழைநீர் தேங்கியுள்ளதால் கீழ்கண்ட சாலைகளில் போக்குவரத்து மெதுவாக செல்கின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் தானா தெரு, வெலிங்டன் முதல் டேம்ஸ் ரோடு, சுதந்திர தின பூங்கா முதல் நாகாஸ் சந்திப்பு, டேங்க் பங்க் ரோடு, ஸ்டெர்லிங் சாலை, பெரியார் பாதை முதல் நெற்குன்றம் பாதை, வடபழனி, நீலாங்கரை சந்திப்பு முதல் நீர்லங்கரை பிளஸ், அண்ணா சாலை முதல் எம்ஜிஆர் சாலை வரை, பிராட்வே சந்திப்பு, பிரகாசம் சாலை, ஹைத் மஹால், மண்ணடி மெட்ரோ, ப்ளூஸ்டார் சந்திப்பு, சிந்தாமணி, ஐயப்பன் கோயில், நெற்குன்றம் ரயில் நகர், மேட்டுக்குளம் முதல் தீயணைப்பு நிலையம் வரை, பட்டுவாஸ் சாலை, ஹப்லிஸ் ஹோட்டல்பால் வெல்ஸ் சாலைகளில் அதிக அளவு மழை நீர் தேங்கி உள்ளது.

சென்னையில் கனமழை நீடித்து வரும் நிலையில், இதுவரை போக்குவரத்து மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. இதுவரை மழையால் முறிந்து விழுந்த மரங்கள் அனைத்தும் வெட்டி அகற்றப்பட்டன.

ஐஸ் ஹவுஸிலிருந்து ஜிஆர்ஹெச் சந்திப்புக்கு வரும் இலகுரக மற்றும் கனரக வாகனங்கள் திருவல்லிக்கேணி ஹை ரோட்டை நோக்கி வலதுபுறம் திரும்பி, ரத்னா கபே வழியாக ஜாம் பஜார் சந்திப்பில் இடதுபுறம் திரும்பி, மார்க்கெட் மற்றும் ராயப்பேட்டை டவர் வழியாகச் சென்று தங்கள் இலக்கை அடையலாம். மேலும், மோட்டார் வாகனங்கள் எப்போதும்போல தங்கள் வழியில் செல்லலாம். ஜிஆர்ஹெச் சந்திப்பில் இருந்து ஐஸ் ஹவுஸ் வரும் வாகனங்களுக்கு மாற்றம் இல்லை, என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்றழுத்த தாழ்வு பகுதி மேலும் வலுவடைந்துள்ள நிலையில் பல்வேறு மாவட்டங்களுக்கு ஆரஞ்சு மற்றும் ரெட் அலர்ட் கொடுக்கப்பட்டு உள்ளது. முன்னதாக சென்னை உள்ளிட்ட பல மாவட்டங்களுக்கு நாளை ரெட் அலர்ட் விடுக்கப்பட்டு இருந்தது. ரெட் அலர்ட் என்றால் வானிலை மிக மோசமாக இருக்கும் என்று அர்த்தம். 24 மணி நேரத்தில் 20 செ.மீ. மேல் கனமழை பதிவானால் ரெட் அலர்ட் விடுக்கப்படும்.

தற்போது மழை நிலவரம், காற்றழுத்த தாழ்வுப்பகுதியின் போக்கை கணித்து, இன்று ரெட் அலர்ட் என்று அதிகாரப்பூர்வமாக சென்னை வானிலை ஆய்வு மையம் புதிய அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறது.

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களுக்கு ‘ரெட்’ அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது அப்படி ஒரு சூழ்நிலை உருவாகி இருப்பதன் காரணமாக, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்திற்கு கன முதல் மிக கனமழை தொடரும். சில பகுதிகளில் அதி கனமழை பெய்யக்கூடும்.

இந்த அறிவிப்பை சென்னை வானிலை ஆய்வு மையமானது, தமது அதிகாரப்பூர்வ எக்ஸ் வலை தள பதிவில் வெளியிட்டு உள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, விழுப்புரம் மாவட்டத்தில் பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. கோவையில் பள்ளிகளுக்கு மட்டும் இன்று அரைநாள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், புதுச்சேரி, காரைக்காலில் இன்று பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மழைநீர் கால்வாய்கள் அமைக்கப்பட்ட போதிலும் அந்த பகுதிகளில் எல்லாம் மழைநீர் தேங்கி இருந்ததாக பல்வேறு இடங்களில் இருந்து புகார்கள் வந்தன.

பட்டாளம், பள்ளிகரணை, வேளச்சேரி உட்பட பல்வேறு பகுதிகளில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால், மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் நிவாரண முகாம்களுக்கு சென்றார்கள். வேளச்சேரி டான்சி நகரில் உள்ள வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் அங்கிருந்தும் மக்கள் வெளியேறினார்கள்.

சென்னை மேற்கு மாம்பலம் ஈஸ்வரன் கோவில் தெருவில் உள்ள வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்தது. ஓ.எம்.ஆர். சாலை கடல் போல் காட்சி அளிக்கிறது. 2 கி.மீ. தூரத்துக்கு வாகனங்கள் ஊர்ந்து செல்கின்றன. கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

வெளுத்து வாங்கும் மழை காரணமாக மக்கள் வீடுகளுக்குள் முடங்கி கிடக்கிறார்கள். கடைகளில் ரொட்டி, பிஸ்கட், பால் பாக்கெட், மெழுகுவர்த்திகள், குடிதண்ணீர் கேன்கள் அதிக அளவில் விற்பனை ஆனது. காய்கறி கடைகளிலும் மக்கள் கிடைத்ததை வாங்கி சென்றனர்.

கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:

கும்மிடிப்பூண்டி, எண்ணூர் தலா 10 செ.மீ., மணலி, கொளத்தூர், திரு.வி.க. நகர், பொன்னேரி, ராயபுரம் தலா 9 செ.மீ., கோடம்பாக்கம், வில்லிவாக்கம், அம்பத்தூர், சோழிங்கநல்லூர், தேனாம்பேட்டை தலா 8 செ.மீ., உத்தண்டி, வானகரம், மாதவரம், பெரம்பூர், மதுரவாயல், சத்யபாமா கல்லூரி, முகலிவாக்கம், இந்துஸ்தான் கல்லூரி, மீனம்பாக்கம், அண்ணா நகர், புழல், அயனாவரம், வளசரவாக்கம், ஐஸ் அவுஸ் தலா 7 செ.மீ., அடையாறு, நந்தனம், எம்.ஜி.ஆர்.நகர், திருவொற்றியூர், கொளப்பாக்கம் தலா 6 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

# மழை பாதித்த பகுதிகளில் நேரில் ஆய்வு மழைநீரை அகற்றிய பணியாளர்களை அழைத்து டீ, பிஸ்கட் வாங்கிக் கொடுத்தார் முதல்வர் ஸ்டாலின்




*சென்னை, 15 அக் 2024:* முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை பெரம்பூரில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு முன்களப் பணியாளர்களை தேநீர் கடைக்கு அழைத்துச் சென்று தேநீர் வழங்கி ஊக்கமளித்து அவர்களுடன் உரையாடினார்.

முதலமைச்சரை முன்களப் பணியாளர்கள் வியந்து பாராட்டினார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்தார். சென்னை புளியந்தோப்புப் பகுதியில் மழைநீர் அகற்றும் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்த 15க்கும் மேற்பட்ட முன்களப் பணியாளர்களைப் பாராட்டினார். அவர்களை அருகிலிருந்த தேநீர் கடைக்கு அழைத்துச்சென்று அவர்களுக்கு டீ, -பிஸ்கட் வாங்கித்தந்து ஊக்கப்படுத்தி உற்சாகமளித்தார்.

முதலமைச்சரின் இந்த செயலை முன்களப் பணியாளர் அனைவரும் வியந்து வெகுவாகப் பாராட்டினார்கள். முதலமைச்சர், தங்களை அழைத்துச்சென்று தேநீர் வாங்கித்தந்து உதவி உற்சாகப்படுத்தியது அவரது பெருந்தன்மையையும் மனித நேயத்தையும் புலப்படுத்துகின்றன. முதலமைச்சர் அளித்துள்ள ஊக்கம் மேலும் தங்களை பணியில் மிகுந்த ஆர்வமுடன் தொடர்ந்து ஈடுபட வழிவகுக்கும் என



தெரிவித்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி, வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை பணிகளுக்கென சென்னை மாநகராட்சி சார்பில் 21 ஆயிரம் பணியாளர்கள் சுழற்சி முறையில் 15 மண்டலங்களிலும் பணி செய்கின்றனர். அதேபோன்று தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் 2,149 பணியாளர்கள், தமிழ்நாடு மின்வாரியம் சார்பாக சென்னையில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின்களப் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் இன்று ஒரே நாளில் 1,000 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு இலவசமாக மருத்துவ உதவிகள் அளிக்கப்படுகிறது.

சென்னை யானைக்கவுனி கால்வாயில் மழை நீர் தடையின்றி செல்ல மழை நீரில் அடித்து வரப்படும் கழிவுகளை ஜேசிபி எந்திரம் மூலம் உடனுக்குடன் அகற்றும் பணிகளை முதல்வர் ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அமைச்சர்கள் கே.என். நேரு, பி.கே. சேகர் பாபு, மாநகராட்சி மேயர் பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் உடன் உள்ளனர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
செவ்வாய், அக்டோபர் 15, 2024

# சென்னையில் நாளை 30 செ.மீ. மேல் மழை: வானிலை மையம் எச்சரிக்கை

சென்னை, 15 அக் 2024: சென்னையில் நாளை 20 மணி நேரத்திற்கு மேலாக 30 செ.மீ. அளவு தொடர் மழை இருக்கும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் இன்றும் நாளையும் அதி கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்றுள்ளது. தொடர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, வட தமிழகம் மற்றும் தெற்கு ஆந்திரம் இடையே கரையை நோக்கி நகரக் கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இன்று சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் அதி கனமழையும் ராணிப்பேட்டை திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம், வேலூர் மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும் பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளை சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் அதி கனமழையும் ராணிப்பேட்டை திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், வேலூர் மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும் பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கிவிட்டது என தெரிவித்துள்ளது. இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "தென்மேற்கு பருவமழை முழுவதும் நிறைவு பெற்று, வடகிழக்கு பருவமழை தமிழ்நாடு, புதுச்சேரி பகுதிகளில் தொடங்கியுள்ளது. வடகிழக்கு பருவமழை மிகத் தீவிரமாக உள்ளது. தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் மழை பெய்துள்ளது. தமிழ்நாட்டில் இன்றும் நாளையும் பெரும்பாலான இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. இதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடும் மழை எதிரொலி: காஞ்சிபுரத்தில் 17 ந் தேதி எடப்பாடி பழனிசாமி பேசும் பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

சென்னை, 15 அக் 2024: அண்ணா தி.மு.க. 53 வது ஆண்டு துவக்க விழாவையொட்டி காஞ்சிபுரத்தில் 17 ந் தேதி அன்று எடப்பாடி பழனிசாமி பேச இருந்த பொதுக்கூட்டம் கடும் மழை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அண்ணா தி.மு.க. 53 வது ஆண்டு தொடக்க நாளை முன்னிட்டு, அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி, 17 ந் தேதி அன்று, காஞ்சிபுரத்தில் நடைபெற இருந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்புப் பேருரை ஆற்றுவார் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்திய வானிலை ஆய்வு மையம், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் உள்ளிட்ட கடலோர மற்றும் வட மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளதால், 17 ந் தேதி அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற இருந்த பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்று அண்ணா தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர்: எடப்பாடி அறிவிப்பு

சென்னை, 15 அக் 2024: அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்கு தற்காலிகமாக மாவட்டக் கழகப் பணிகளை கவனிப்பதற்கு பொறுப்பாளராக கன்னியாகுமரி மேற்கு மாவட்டச் செயலாளர் டி.ஜான்தங்கம் இன்று முதல் செயல்படுவார் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# கன மழை; குடிநீர் ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரிப்பு

சென்னை, 15 அக் 2024: திருவள்ளூரில் பெய்து வரும் கனமழை காரணமாக, சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. ஏரிகளின் நீர்வரத்து விவரம் பின்வருமாறு:

புழல் ஏரிக்கான நீர்வரத்து நேற்று 196 கன அடியாக இருந்த நிலையில், இன்று 277 கன அடியாக அதிகரித்துள்ளது.

சோழவரம் ஏரிக்கு நேற்று நீர்வரத்து இல்லாத நிலையில் இன்று 160 கன அடியாக அதிகரித்துள்ளது.

செம்பரம்பாக்கம் ஏரிக்கான நீர்வரத்து நேற்று 250 கன அடியாக இருந்த நிலையில் 260 கன அடியாக அதிகரித்துள்ளது.

பூண்டி ஏரிக்கான நீர்வரத்து 650 கன அடியாக அதிகரித்துள்ளது.

வீராணம் ஏரிக்கான நீர்வரத்து 1,423 கன அடியாக உயர்ந்துள்ளது.

# சிகரெட் லைட்டர் உதிரிபாகங்களின் இறக்குமதிக்கு தடை: மத்திய அமைச்சருக்கு ஸ்டாலின் நன்றி

சென்னை, 15 அக் 2024: சிகரெட் லைட்டர் தயாரிப்புக்கான உதிரிபாகங்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது அல்லவா? குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப்பதிவில் கூறியிருப்பதாவது:

‘‘எனது கோரிக்கைகளை முழுமையாக ஏற்று, ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய - 20 ரூபாய்க்குக் குறைவான பிளாஸ்டிக் சிகரெட் லைட்டர்களுக்குக் கடந்த ஆண்டு தடை விதித்ததைத் தொடர்ந்து, தற்போது சிகரெட் லைட்டர்களின் தயாரிப்புக்கான உதிரிபாகங்களின் இறக்குமதிக்கும் தடை விதித்துள்ளமைக்காக ஒன்றிய அமைச்சர் பியுஷ் கோயலுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முடிவு வரவேற்புக்குரியது. இதனால் தமிழ்நாட்டின் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் வலுப்பெறுவதுடன், சுமார் ஒரு லட்சம் பேரின் வேலைவாய்ப்புகள் பாதுகாக்கப்படும். மேலும், சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் பிளாஸ்டிக் கழிவுகளும் குறையும்’’. இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

# அப்துல் கலாமின் பிறந்த நாள்: இளையதலை முறையினருக்கு முதல்வர் ஸ்டாலின் அழைப்பு

சென்னை, 15 அக் 2024: முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் பிறந்த நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

‘‘கல்வியும், நெஞ்சில் கனவும், அதை நனவாக்கத் தேவையான கடும் உழைப்பும் இருந்தால் உயர்வு நம்மைத் தேடி வரும் என்ற ஊக்கத்தை இளைஞர்களிடம் விதைத்த நமது முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாமின் பிறந்தநாள் இன்று! நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், அப்துல் கலாமுக்கு அவர் பயின்று - பயிற்றுவித்த அண்ணா பல்கலைக்கழகத்தில் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்து, கடந்த ஆண்டு திறந்து வைத்தோம்.

அறிவியல் வளர்ச்சி, மனிதவியல் மற்றும் மாணவர் நலன் ஆகியவற்றுக்குப் பாடுபடும் தமிழர்களுக்கு, ஆண்டுதோறும் விடுதலை நாளில் “அப்துல் கலாம் விருது” வழங்கி வருகிறோம்.

நமது இளைஞர்கள் காணும் கனவுகள் மெய்ப்படத்தான் “நான் முதல்வன்” உள்ளிட்ட திட்டங்களை நமது திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது. கல்வியின் துணைக்கொண்டு - அறிவிற் சிறந்து விளங்கி, நமது இளைஞர்கள் அவருக்குப் பெருமை சேர்த்திட வேண்டும்’’. இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

# அ.தி.மு.க.வுக்கு ஆதரவு தர மக்கள் தயாராகி விட்டார்கள் 2026-ல் அண்ணா தி.மு.க. ஆட்சி அமைவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது நம் பணியை தொடர்வோம்: தொண்டர்களுக்கு எடப்பாடி கடிதம்



சென்னை, 15 அக் 2024: எத்தனை சக்திகள் எதிர்த்து நின்றாலும் 2026 ல் அண்ணா தி.மு.க. ஆட்சி அமைவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அம்மாவின் ஆட்சியை மலரச் செய்ய அண்ணா தி.மு.க.வுக்கு ஆதரவு தர மக்கள் தயாராகி விட்டனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

அண்ணா தி.மு.க.வின் 53 வது ஆண்டு துவக்க விழாவையொட்டி அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி தொண்டர்களுக்கு எழுதியுள்ள மடலில் கூறியிருப்பதாவது:

தி.மு.க. ஆட்சியின் துயரங்களையும், தமிழ்நாட்டு மக்கள் படும் துன்பங்களையும் கண்டு வெகுண்டெழுந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தன்மீது பேரன்பு கொண்ட தமிழ்நாட்டு மக்களின் அழைப்பை ஏற்றார். அண்ணாவின் கொள்கைகளை அணையாத விளக்குகளாய் காப்பாற்றப் புறப்பட்டார். அண்ணா தி.மு.க.வை 1972 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ம் தேதி தொடங்கினார்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். 1977, 1980, 1985 என தொடர்ந்து 3 முறை வெற்றிபெற்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவி வகித்து, ஏழை, எளியோர் பயன்பெறும் வகையில் பல்வேறு முத்தான திட்டங்களை செயல்படுத்தி மக்களுக்கு பொற்கால ஆட்சியை வழங்கினார்.

அம்மாவின் தலைமையில் 15 ஆண்டுகளுக்கும் மேலாகவும், அம்மாவின் அருந்தொண்டனாகிய உங்கள் அன்புச் சகோதரனான எனது தலைமையில் சுமார் 4ரு ஆண்டுகளும் நாடு போற்றும் நல்லாட்சியை, மக்கள் பாராட்டும் மகத்தான ஆட்சியைத் தந்ததில் பெருமிதம் அடைகிறேன்.

கழகம் தொடங்கிய காலம் தொட்டு, மக்கள் பணியில் கண் துஞ்சாது கடமையாற்றி, அண்ணா தி.மு.க. 30 ஆண்டுகால மக்கள் ஆட்சியில் மகத்தான தொண்டுகளால், மக்கள் போற்றும் சாதனைகளால்

தமிழ்நாடு தலை நிமிர்ந்தது; தன்னிகரில்லாத எழுச்சி பெற்றது. இதனால், சமூக நீதி மலர்ந்தது; சமத்துவம் மலர்ந்தது; சமதர்மம் பிறந்தது; மக்கள் வாழ்வு உயர்ந்தது; தமிழகத்தில் கல்வி வளர்ந்தது; மக்களின் கவலைகள் மறைந்தன.

மற்றொரு புறம் புரட்சித் தலைவி அம்மாவின் மறைவுக்குப் பிறகு, புராண, இதிகாசங்களில் நடைபெற்றதாகச் சொல்லப்படும் தந்திரங்களுக்கும், சூழ்ச்சிகளுக்கும் இணையான திரை மறைவு வேலைகளால், சூழ்ச்சிகளால், சதி வலைகளால், உடனிருந்து கொள்ளும் வியாதிகளாய் பதவி சுகம் அனுபவித்துக்கொண்டு கழகத்தை அழிக்கத் துடிக்கும் எட்டப்பர்கள் இந்த இயக்கத்தையே காட்டிக்கொடுத்து, அழிக்கத் துணிந்தார்கள்.

எத்தனையோ சூழ்ச்சிகள் நடைபெற்றன. இன்னும் எத்தனை நாளைக்கு இந்த ஆட்சி நீடிக்கப்போகிறது?" என்று ஏளனம் பேசியவர்கள் ஒரு புறம். மனசாட்சியை மறைத்துவிட்டு, கபட நாடகங்களை அரங்கேற்றினார்கள். ஆனால், அவர்கள் சூது மதி பலிக்கவில்லை; சூழ்ச்சிகள் வேலை செய்யவில்லை. அவர்கள் விரித்த வலையிலே அவர்களே மாட்டிக்கொண்டதை நாடறியும்.

எனக்குப் பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும் அண்ணா தி.மு.க. மக்களுக்காகவே இயங்கும்" என்று புரட்சித் தலைவி அம்மா சட்டமன்றத்தில் சூளுரைத்து சபதம் ஏற்றார். அவர்களின் சபதத்தை நிறைவேற்றி, மக்கள் பணியே மகேசன் பணி என்ற அண்ணாவின் கொள்கைகளை நெஞ்சில் ஏற்றி, எண்ணற்ற துரோகங்களை முறியடித்து, அம்மா விட்டுச் சென்ற ஆட்சியை சிறப்புடன் நடத்த நம் இருபெரும் தலைவர்களின் ஆசி உங்கள் பேரன்பால் எனக்கு கிடைத்தது. தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்; மீண்டும் தர்மமே வெல்லும்'' என்பதற்கு இணங்க அம்மாவின் ஆட்சி எனது தலைமையில் மக்களாட்சியாகவே நடந்தது. என்னுடைய அயராத முயற்சிகளுக்கும், தொய்வில்லாத பணிகளுக்கும் நாள்தோறும் துணை நிற்கும்

உங்கள் ஒவ்வொருவரையும் இந்தப் பொன்னாளில் நன்றியோடு நினைக்கிறேன்; கழகத் தொண்டர்களின் அர்ப்பணிப்பை, தியாகத்தை நினைத்துப் போற்றுகிறேன். அண்ணா தி.மு.க. இன்று களைகள் எடுத்த தோட்டமாய் செழித்து நிற்கிறது.

என்ற வள்ளுவரின் அறிவுரையை மறக்கலாமா? வெளிப்படையான பகைவர்க்கு அஞ்ச வேண்டியதில்லை. ஆனால், நண்பர்கள் போல் இருந்து உட்பகை கொண்டவர்களின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும் என்று எத்தனை ஆழமான அறிவுரையை வள்ளுவப் பேராசான் நமக்குத் தந்திருக்கிறார். உட்பகை கொண்டவர்கள் இனி நம் இயக்கத்திற்கு வேண்டாம் என்பதில் உறுதியோடு நிற்போம்.

கழக உடன்பிறப்புகளே, நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும், இப்படை தோற்கின் எப்படை வெல்லும்'' என்ற வைர வரிகள் நமக்கு நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன.

இன்னும் 1லு ஆண்டுகளில் சட்டமன்றப் பொதுத்தேர்தல் வர இருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ஆட்சியை, புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சியை மலரச் செய்வதற்கு, அண்ணா தி.மு.க.விற்கு ஆதரவுதர மக்கள் தயாராகிவிட்டார்கள்.

நமது தோட்டத்தில் களைகள் நீங்கி பயிர்கள் செழித்து வளர்ந்திருக்கிறது. பொன்னான வசந்த காலம் நம் கண்ணெதிரே தெரிகிறது. எத்தனை சக்திகள் எதிர்த்து நின்றாலும், 2026-ல் கழகத்தின் ஆட்சி அமைந்திடுவதை எந்த சக்தியும் தடுத்துவிட முடியாது. அதற்கு, எந்த ஒரு தியாகத்தையும் செய்ய நான் தயாராக இருக்கிறேன். உங்களின் உயர்வுக்காகவும், கழகத்தின் வெற்றிகாகவும் என்னையே அர்ப்பணித்து உழைத்து வருகிறேன்.

விடியும் வேளை வரப்போகுது, தருமம் தீர்ப்பை தரப்போகுது''

என்ற புரட்சித் தலைவரின் தத்துவ வரிகள் நமக்குள் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

வெற்றி நிச்சயம்; இதுவே நமது லட்சியம். நாளை நமதே! இந்த நாடும் நமதே! என்று நம் பணிகளை நாள்தோறும் ஆற்றுவோம்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## அமெரிக்க தலைமை மருத்துவரின் இந்தியப் பயணம்: தென்னிந்திய வம்சாவளியை சேர்ந்த டாக்டர் விவேக் மூர்த்தி உலக மனநல தினத்தை முன்னிட்டு தில்லி, மும்பை மற்றும் பெங்களூருவில் நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்

சென்னை, 15 அக் 2024: அமெரிக்க அரசின் தலைமை மருத்துவர் விவேக் மூர்த்தி, உலக மனநல தின விழாவை முன்னிட்டு தில்லி, மும்பை மற்றும் பெங்களூருவுக்கு பயணம் மேற்கொண்டார். மருத்துவர் மூர்த்தி அமெரிக்காவின் முதன்மை மருத்துவராக பணியாற்றி வருகிறார். பொது சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பதில் உலகளாவிய அளவில் அவர் சிறந்து விளங்குகிறார். இந்திய வம்சாவளியை சேர்ந்த முதல் அமெரிக்க அரசு தலைமை மருத்துவரான மூர்த்தியின் பெற்றோர் தென்னிந்தியாவை (கர்நாடகா) சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. டாக்டர் மூர்த்தியின் இந்தியப் பயணம், அமெரிக்க அரசு தலைமை மருத்துவரின் முன்னுரிமையான உலகளாவிய மனநலம் மற்றும் தனிமை நெருக்கடிக்கு தீர்வு காண்பதை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

பெங்களூருவில் உள்ள ஸ்ரீ ஜெயதேவா இதய அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் பேசிய டாக்டர் மூர்த்தி கூறியதாவது: "எனது மூதாதையரின் பூமியான இந்தியாவுக்கு வருவதற்கான வாய்ப்புக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன், மேலும் எனது குழந்தைப் பருவத்தில் என் பெற்றோர் என்னுள் விதைக்க முயன்ற பல்வேறு விஷயங்களுக்கு இந்தியா தான் ஆதாரம். உறவுகளின் முக்கியத்துவம், சமூகத்தின் ஒரு பகுதியாக இருப்பதன் ஆற்றல் மற்றும் பிறருக்கு சேவை செய்வதன் மூலம் கிடைக்கும் ஆழ்ந்த மன நிறைவு ஆகியவற்றை அவர்கள் எனக்குக் கற்றுக் கொடுத்தனர். அமெரிக்காவும் இந்தியாவும் மக்கள் நலனில் நீண்ட மற்றும் புகழ் பெற்ற கூட்டாண்மையைக் கொண்டுள்ளன. மனநலம் பற்றி கற்கவும் பேசவும் நான் இந்தியாவுக்கு வந்துள்ளேன். நமது நாடுகள் தேவைகளைப் பகிர்ந்து கொள்ளும் மற்றும் கற்றலுக்கான வாய்ப்புகளைப் இந்த பயணம் வழங்கியுள்ளது. ஆரோக்கியத்தின் இந்த முக்கிய பரிமாணத்துடன் நெருங்கிய தொடர்புடைய சிக்கல்களை களைய உழைக்கும் முக்கிய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களை நான் இந்தியாவில் சந்தித்துள்ளேன். மனநல சுகாதார சேவைகளுக்கான அணுகலை அதிகரிக்கவும், மனநல நெருக்கடியின் காரணிகளை நிவர்த்தி செய்யவும் தேவையான உதவியை நாடுவதில் தயக்கம் இருக்கக் கூடாது என்பதை மக்களுக்கு தெரியப்படுத்த நாம் ஒன்றிணைந்து செயல்படுவது அவசியம். உலக மனநல தினம் என்பது, நாம் அனைவரும் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக் கொள்ளலாம் மற்றும் உலகளாவிய சவால்களைச் சமாளிக்க ஒன்றாக □ செயல்படலாம் என்பதற்கான சக்தி வாய்ந்த நினைவூட்டலாகும்."

சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதர் கிறிஸ் ஹோட்ஜஸ் கூறியதாவது: "அமெரிக்காவின் முதன்மை மருத்துவர் டாக்டர் விவேக் மூர்த்தி, மன நலனின் இன்றியமையாத தேவை, மன நலனின் முக்கியத்துவம், அர்த்தமுள்ள உறவுகள் மற்றும் சமூகத் தொடர்புகள் ஆகியவற்றின் மூலம் நட்பு, சமூகம், நம்பிக்கை சார்ந்த உறவுகளை உருவாக்க உதவுவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

அவரது இந்திய பயணத்தின் போது இளைஞர்களை சந்தித்த டாக்டர் மூர்த்தி, அவர்கள் எதிர்கொள்ளும் போராட்டங்களைப் பற்றி நேரடியாகக் கேட்டறிந்தார்; நீதா முகேஷ் அம்பானி ஜூனியர் பள்ளி, அமெரிக்கன் ஸ்கூல் ஆஃப் பாம்பே மற்றும் இந்திய தொழில்நுட்ப கழக மாணவர்களுடன் அவர் உரையாடினர். தனிமை, மனநலம் மற்றும் சமூக ஊடகங்கள் பற்றிய பிரச்சினைகளை மாணவர்களுடன் அவர் விவாதித்தார். தொடர்ந்து, ஸ்ரீ ஜெயதேவா இதய அறிவியல் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் செயல்பட்டு வரும் நூரா ஆரோக்கிய மையத்தை அவர் பார்வையிட்டார்.

உலக சுகாதார அமைப்பின் சமூக இணைப்புக்கான ஆணையத்தின் இணைத் தலைவராக அவர் பல்வேறு நாடுகளுக்குச் சென்று, மனநலம் பற்றிய அனுபவங்களைப அறிந்து கொள்வதற்காக முனைப்புடன் பணியாற்றுகிறார். சமூக ஊடகங்கள் மற்றும் இளைஞர் மனநலம் குறித்த வழிகாட்டுதல் நடைமுறையையும் அவர் வழங்கியுள்ளார்."

## சென்னையில் தயார் நிலையில் படகுகள், மீட்பு படையினர் கட்டுப்பாட்டு அறையில் ஆய்வுக்குப்பின் உதயநிதி பேட்டி

சென்னை, 15 அக் 2024: சென்னை மற்றும் சென்னையை சுற்றியுள்ள மாவட்டங்களில் மொத்தம் 931 நிவாரண மையங்கள் தயார் நிலையில் உள்ளன. சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறைக்கு வந்த 1,500 அழைப்புகளில் 600 அழைப்புகளுக்கு உடனடி தீர்வு காணப்பட்டுள்ளன என்று உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

தமிழ்நாடு முழுவதும் மீட்புப்பணியில் ஈடுபட 26 பேரிடர் மீட்புக்குழுக்கள் மற்றும் 219 படகுகள் தயாராக உள்ளன என்றும் அவர் கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி, இன்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழிலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது கட்டுப்பாட்டு அறையில் அனைத்து துறை பணியாளர்கள் கண்காணிப்பு மற்றும் சீரமைப்பு பணிகள் தொடர்பாக சம்மந்தப்பட்ட மாவட்ட நிர்வாகங்களுடன் தொடர்பு கெண்டு பணியாற்றி வருவதையும், எல்.ஈ.டி திரை மூலம் மழை பெய்யும் பகுதிகள் குறித்து பார்வையிட்டும் ஆய்வு செய்தார்.

பின்னர் துணை முதலமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

வடகிழக்கு பருவமழை சென்னை மாநகராட்சி பகுதிகளில் நேற்று காலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி வரை முடிவடைந்த 24 மணி நேரத்தில் 4.6 செ.மீ மழை பெய்திருக்கிறது. இதில் அதிகபட்சமாக சோழிங்க நல்லூர் 6.1 செ.மீ., தேனாம்பேட்டையில் 6.1 செ.மீ. மழையும் பெய்துள்ளது. குறைந்தபட்சமாக தண்டையார்பேட்டையில் 2.8 செ.மீ. மழையும், புழல் பகுதியில் 3 செ.மீ., மாதவரத்தில் 4.0 செ.மீ. மழையும் பெய்துள்ளது.

மழையின் காரணமாக சென்னை மாநகராட்சி பகுதியில் 8 மரங்கள் விழுந்துள்ளன. ஒரு மரம் உடனடியாக அகற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 7 மரங்களை அகற்றும் பணிகள் இன்னும் 1 மணி நேரத்தில் முடிக்கப்படும். சென்னை மாநகராட்சி சார்பில் 300 இடங்களில் நிவாரண மையங்கள் 50 முதல் 1,000 நபர்கள் தங்கும் வகையிலான நிவாரண மையங்கள் தயார் நிலையில் உள்ளன.

இந்த நிவாரண மையங்களில் தண்ணீர், பால்பாக்கெட், பிஸ்கெட், பிரட், உணவு ஆகியவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. 35 பொது சமயலறைகள் தயார் நிலையில் உள்ளன. சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் 20 சுரங்க பாதைகளில் எந்தவித இடையூறுமின்றி போக்குவரத்து நடைபெற்று வருகின்றது. கணேசபுரம், பெரம்பூர் ஆகிய இரண்டு சுரங்க பாதைகள் மட்டும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

அந்த சுரங்கப்பாதைகளிலும் மோட்டார் பம்ப் மூலமாக தண்ணீர் அகற்றப்பட்டு வருகின்றது. மழை ஒரு மணிநேரம் விட்டால் அந்த சுரங்கபாதைகளும் சரி செய்யப்பட்டு விடும். நீர்தேங்கியுள்ள 300 க்கும் மேற்பட்ட இடங்களில் நீர் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 24 மணிநேரத்தில் எங்கும் மின்தடை எற்படவில்லை. கடந்த 12 மணிநேரத்தில் சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறைக்கு 1,500 அழைப்புகள் வந்துள்ளன. இதில் 600 அழைப்புகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டை பொறுத்தவரை சிவகங்கை மாவட்டத்தில் அதிகபட்சமாக 13.5 செ.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. விருதுநகரில் 7 செ.மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது.

சென்னையை சுற்றியுள்ள மாவட்டங்களில் மாநில பேரிடர் மீட்புக்குழு மற்றும் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் 26 இடங்களில் பணிபுரிய தயார் நிலையில் உள்ளனர். இதுவரை 24 குழுக்கள் சென்னை மற்றும் பிற மாவட்டங்களுக்கு சென்றடைந்துள்ளனர். மீட்புப்பணி யில் ஈடுபட சென்னையில் 89 படகுகளும், பிறமாவட்டங்களில் 130 படகுகளும் தயார் நிலையில் உள்ளன.

சென்னையில் 300 நிவாரண மையங்களும், சென்னையை சுற்றியுள்ள மாவட்டங்களில் 631 நிவாரண மையங்கள் என மொத்தம் 931 மையங்கள் தயார் நிலையில் உள்ளன.

சென்னையில் 15 ஐ.ஏ.எஸ் அதிகாரிகளும், அனைத்து மாவட்டங்களில் மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் வெள்ளத்தை கண்காணிக்க கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் தமிழகம் முழுவதும் 1,000 இடங்களில் மழைக்கால மருத்துவமுகாம் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில் மட்டும் 100 இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில் 13 ஆயிரம் தன்னார்வலர்கள் பணியில் ஈடுபட பதிவு செய்துள்ளார்கள். தமிழ்நாடு முழுவதும் 65 ஆயிரம் தன்னார்வலர்கள் தயாராக உள்ளனர். தேவைப்பட்டால் பிற மாவட்ட தன்னார்வலர்கள் சென்னைக்கு அழைத்துவரப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று துணை முதலமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமை செயலாளர் ராஜேஷ் லக்கானி, துணை முதலமைச்சரின் செயலாளர் பிரதீப் யாதவ், சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் தாரேஸ் அகமது மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சாம்சங் இந்தியா 'நாளைய 2024-க்காக தீர்வு காணுங்கள்'-ன் வெற்றியாளர்களை அறிவித்துள்ளது: டீம் எக்கோ டெக் இன்னோவேட்டர் சமூக சாம்பியன் விருது & டீம் மெட்டல் சுற்றுசூழல் சாம்பியன் விருது




கோயம்புத்தூர், 15 அக் 2024: சாம்சங் இந்தியா ஆனது தனது முன்னனி தேசிய கல்வி மற்றும் புத்தாக்கம் போட்டியான 'நாளைய 2024-க்காக தீர்வு காணுங்கள்' -ன் 3-வது பதிப்பின் வெற்றியாளர்களாக எக்கோ டெக் இன்னோவேட்டர் மற்றும் மெட்டல் ஆகிய அணிகளை அறிவித்துள்ளது. பள்ளி பிரிவில் அசாமை சேர்ந்த எக்கோ டெக் இன்னோவேட்டர் ஆனது சமூக சாம்பியனாக அறிவிக்கப்பட்டது மற்றும் உடுப்பி, கர்நாடகாவை சேர்ந்த மெட்டல் ஆனது இளைஞர் பிரிவில் சுற்றுசூழல் சாம்பியனாக அறிவிக்கப்பட்டது. இது முக்கிய பெருநகரங்களுக்கு வெளியேயும் இத்திட்டத்தின் விரவலை எடுத்துக்கூறுகிறது.

மாசுப்படாத குடிநீருக்கான நியாயமான அணுகலை ஒட்டிய சிந்தனையை உருவாக்கிய எக்கோ டெக் இன்னோவேட்டர், ப்ரோட்டோடைப் மேம்பாட்டுக்காக ரூ.25 லட்சத்தை அடிப்படை உதவித்தொகையாக பெற்றது. நிலத்தடி நீரிலிருந்து ஆர்சனிக்கை அகற்றும் தொழில்நுட்பத்தை உருவாக்கிய மெட்டல், ஐ ஐ டி-டெல்லியில் அடைகாப்பதற்காக ரூ.50 லட்சத்தை உதவித்தொகையாக பெற்றது. சாம்சங் தென் மேற்கு ஆசியாவின் தலைவர் மற்றும் சி ஈ ஓ ஆன ஜெபி பார்க் மற்றும் ஐக்கிய நாடுகளின் உள்ளுறை ஒருங்கமைப்பாளர் ஷோம்பி ஷார்ப் ஆகியோர் இந்த அணிகளுக்கு சான்றிதழ்களையும் கேடயங்களையும் வழங்கினர்.

மேலும், 'சமூக சாம்பியன்'-ன் பள்ளி ஆனது ஸ்மார்ட் டிஸ்ப்ளே பிளிப் 75", ஃப்ரீஸ்டையில் ப்ரொஜெக்டர் மற்றும் 10 கேலக்சி டேப் எஸ்10+ ஆகிய சாம்சங் தயாரிப்புகளையும் கல்விக்காகவும் பிரச்சினை-தீர்க்கும் மனநிலைக்காகவும் உதவுவதற்காக பெறுவார்கள். இதே போல 'சுற்றுசூழல் சாம்பியன்'-ன் கல்லூரி ஆனது ஸ்மார்ட் டிஸ்ப்ளே 75", ஃப்ரீஸ்டையில் ப்ரொஜெக்டர் மற்றும் 10 கேலக்சி புக் 4 ப்ரோ மடிக்கணினிகளை சமூக தொழில்முனைவதை ஊக்குவிக்க பெறும்.

பத்து அணிகள் ஒவ்வொன்றும் தலா ரூ.1 லட்சத்தை பெற்றிருக்கும் அதே வேளையில் அனைத்து உறுப்பினர்களும் சான்றிதழ்களை பெற்றனர். கூடுதலாக பள்ளி பிரிவு பங்கேற்பாளர்கள் ஒரு கேலக்சி வாட்ச் அல்ட்ரா பெற்றிருக்கும் அதே வேளையில் இளைஞர் பிரிவு பங்கேற்பாளர்கள் கேலக்சி இசெட் பிளிப்6-ஐ பெற்றனர். முன்னனி சி எஸ் ஆர் திட்டமான சாம்சங் சால்வ் பார் டுமாரோ ஆனது நிஜ வாழ்வின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் தங்களின் ஆக்கப்புத்தாக்க யோசனைகளால் மக்களின் வாழ்வுகளை மாற்றவும் நாட்டின் இளைஞர்களுக்கு ஆற்றலை வழங்க இலக்கு கொண்டுள்ளது.

"சாம்சங்கில், இந்த ஆண்டின் நாளைய தினத்துக்காக தீர்வு காணுங்கள்-ன் பதிப்பில் அனைத்து பங்கேற்பாளர்களும் தங்கள் ஆக்கப்புத்தாக்கம் மற்றும் படைப்புதிறனை வெளிக்காட்டியது பற்றி நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். எங்கள் முன்னனி சி எஸ் ஆர் முன்னெடுப்பின் மூலம் இளம் மனதுகள் தங்கள் சமூகங்கள் மற்றும் சுற்றுசூழலில் தாங்கள் எதிர்கொள்ளும் ஒருசில மிகப்பெரிய சவால்களை கருவிகள், வழிகாட்டல் பயிற்சி மற்றும் வாய்ப்புகளை வழங்கி அவர்களுக்கு அவற்றை எதிர்கொள்ளும் ஆற்றலை வழங்க இலக்கு கொண்டுள்ளோம். எக்கோ டெக் இன்னோவேட்டர் மற்றும் மெட்டல் ஆகிய அணிகளின் சாதனைகள் ஆனவை தொழில்நுட்பம் மற்றும் ஆக்கப்புத்தாக்கம் மூலம் அர்த்தமுள்ள தாக்கத்தை உருவாக்கும் அடுத்த தலைமுறையின் ஆற்றல் வெளிப்படுகின்றன. இந்த இளம் ஆக்கப்புத்தாளர்களின் யோசனைகள் உயிர்பெற்று ஒரு நிரந்தர வேறுபாட்டை உருவாக்கும் தருணத்திற்காக ஆவலுடன் காத்திருக்கிறோம்," என்று சாம்சங் தென் மேற்கு ஆசியாவின் தலைவர் மற்றும் சிஈஓ ஆனா ஜெபி பார்க் கூறினார்.

## கனமழை முடியும் வரை ஆன்லைன் வகுப்பு நடத்த கூடாது அமைச்சர் அன்பில் மகேஸ் உத்தரவு




சென்னை, 15 அக் 2024: கனமழையால் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்ட மாவட்டங்களில் மாணவர்களுக்கான இணையவழி வகுப்புகளையும் ஒத்தி வைக்குமாறு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் எக்ஸ் சமூகவலைதளப் பக்கத்தில், "கனமழையால் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்ட மாவட்டங்களில் மாணவர்களுக்கான இணையவழி வகுப்புகளையும் ஒத்தி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கனமழை மற்றும் தீவிரக் காற்று வீசும் சூழ்நிலையில் மாணவர்கள் தொழில்நுட்ப சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடலாம். ஆகையால் கனமழை முடியும் வரை ஆன்லைன் வகுப்புகளைத் தவிர்க்க வேண்டும் என அனைத்துப் பள்ளி நிர்வாகங்களையும் கேட்டுக்கொள்கிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அமைச்சர் கூறியதாவது:

மாணவர்களின் பாதுகாப்பு கருதியே பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்படுகிறது. அப்படியிருந்தும் சிபிஎஸ்இ பள்ளிகள், சில தனியார் பள்ளிகள் ஆன்லைன் வகுப்புகள் நடத்துவதாகத் தகவல் வருகிறது. பெற்றோரும் ஆன்லைன் வகுப்புகளை விரும்புவதாக பள்ளிகள் தெரிவிக்கின்றன. ஆனால் மழை, பலத்த காற்று காரணமாக தொழில்நுட்ப சவால்கள் உள்ளிட்ட பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படும் என்பதால் நாங்கள் ஆன்லைன் வகுப்புகளைத் தவிர்க்கும்படி வலியுறுத்துகிறோம்.

அதேபோல் பள்ளிகளுக்கு விடுமுறை விடுவது தொடர்பாக மாவட்ட நிர்வாகம் முந்தைய நாளே தகவல் தெரிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# கிழக்கு இரயில்வே மண்டலத்தின் மால்டா கோட்டத்திலிருந்து புதிய ஆர்டரைப் பெற்றிருக்கும் எம்ஐசி எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்

சென்னை, 15 அக் 2024: எல்ஈடி வீடியோ டிஸ்ப்ளே-களின் வடிவமைப்பு, உருவாக்கம் மற்றும் உற்பத்தி செயல்பாடுகளில் உலகளவில் முதன்மை வகிக்கும் ஒரு நிறுவனமான எம்ஐசி எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் இயங்கி வருகிறது. கிழக்கு இரயில்வே மண்டலத்தின் மால்டா கோட்டத்தின், அப்ஹைபூர் இரயில் நிலையத்தில் சி ஐ பி வசதியினை நிறுவுவதற்கு மால்டா இரயில்வே கோட்டத்திடமிருந்து ஒப்புதலுக்கான ஏற்பளிப்பு கடிதத்தை தான் பெற்றிருப்பதை எம் ஐ சி எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் அறிவித்திருக்கிறது. இதற்கு முன்னதாக, தொலைதொடர்பு அடிப்படையிலான பயணியர் வசதிகளை எஸ்ஜிஈ, எஸ்ஏ-ல் வழங்குவது மற்றும் ஈரோடு ஈஎல்எஸ்-ல் ஃபிஒஸ்நெட் சாதன அமைப்பை நிறுவுவது ஆகிய பணிகளுக்காக ஒப்புதலளிக்கும் கடிதத்தை தெற்கு இரயில்வேயின் சேலம் கோட்டத்திடமிருந்து தான் பெற்றிருப்பதாக இந்நிறுவனம் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. சமீபத்தில், மேற்கு இரயில்வே மண்டலத்தின் ரட்லாம் கோட்டத்திடமிருந்து தொலைதொடர்பு சாதனங்களை வழங்குவது, நிறுவுவது, பரிசோதிப்பது மற்றும் செயலாக்கம் தனது முன்வரைவு திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்கும் கடிதத்தை இந்நிறுவனம் பெற்றிருந்தது. அம்ரித் பாரத் ஸ்டேஷன் ஸ்கீம் (ஏ பி எஸ் எஸ்) என்பதன் கீழ் 14 இரயில் நிலையங்களில் பி எஃப் - ஐ இணைப்பதற்காக 12 மீட்டர் அகலமுள்ள நடை மேம்பாலத்தை அமைப்பதற்காக இக்கடிதம் பெறப்பட்டிருக்கிறது.

2024 ஜுன் 30-ல் முடிவடைந்த காலாண்டின்போது சிறப்பான வருவாய் ஈட்டப்பட்டிருப்பதை இந்நிறுவனம் சமீபத்தில் தெரிவித்திருந்தது. இக்காலாண்டில் இயக்க செயல்பாடுகளிலிருந்து ரூ. 1071.46 இலட்சம் வருவாய் ஈட்டியிருந்தது. முந்தைய ஆண்டின் இதே காலஅளவோடு ஒப்பிடுகையில் இது 53% வளர்ச்சியாகும். கியூ1எஃப்ஒய்24-ல் ரூ. 212.26 இலட்சமாக இருந்த எபிட்டா, முந்தைய ஆண்டைவிட 32% அதிகரித்து ரூ. 281.24 இலட்சமாக கியூ1எஃப்ஒய்25-ல் பதிவாகியிருக்கிறது. வரிக்கு பிந்தைய இலாபம் முந்தைய ஆண்டின் அளவான ரூ. 123.60 இலட்சத்திலிருந்து ரூ. 196.52 இலட்சமாக கியூ1எஃப்ஒய்25-ல் 59% வளர்ச்சியினை பதிவுசெய்திருக்கிறது. வரிக்கு பிந்தைய இலாப வரம்பு, முந்தைய ஆண்டைவிட 45 பி பி எஸ் வளர்ச்சி பதிவுடன் 17.98% ஆக உயர்ந்திருக்கிறது

ஜி பி எஸ் (குளோபல் பொஷிஷனிங் சிஸ்டம்) அடிப்படையிலான பொது தகவலளிப்பு (பி ஏ) சாதனத்தையும், பயணியருக்கான தகவல் சாதனத்தையும் (பி ஐ எஸ்) ("பாபிஸ்") மற்றும் புதிய மற்றும் ஏற்கனவே இருக்கும் எல் எச் பி/ஐ சி எஃப் வகை ஏசி மற்றும் ஏசி அல்லாத கோச்களுக்கு எல்ஈடி சென்றடையும் இடத்தை அறிவிக்கும் பலகைகளை தான் உருவாக்கியிருப்பதாக இந்நிறுவனம் இதற்கு முன்னதாக பெருமையுடன் அறிவித்திருந்தது. ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தரநிலைகள் நிறுவனத்தின் அளவு குறியீடுகள் எண் ஆர் டி எஸ் ஓ/சி ஜி-18001 (ரெவ்.2) என்பதன் படி இவை உருவாக்கப்பட்டிருக்கின்றன. செயல்திறன் மற்றும் செயல்திறனுக்கான மதிப்பாய்வுக்காக இச்சாதனங்கள் தொடர்பாக விண்ணப்பத்தை இந்நிறுவனம் செய்திருந்தது.

# க்ரோமா மாபெரும் விற்பனை கொண்டாட்டத்தை 'ஃபெஸ்டிவல் ஆஃப் ட்ரீம்ஸ்' பிரச்சாரத்துடன் தொடங்குகிறது! எலக்ட்ரானிக்ஸ் பொருட்களுக்கு ஏராளமான சலுகைகள் கூடவே ஆச்சர்யமூட்டும் பண்டிகை கால சிறப்பு தள்ளுபடி ஆரம்பம்!!

சென்னை, 15 அக் 2024: சென்னை, க்ரோமா, தனது வருடாந்திர 'ஃபெஸ்டிவல் ஆஃப் ட்ரீம்ஸ்' பிரச்சாரத்துடன் மீண்டும் ஏராளமான தள்ளுபடி சலுகைகளுடன் களமிறங்கியுள்ளது. இந்த மாபெரும் பண்டிகை கால சிறப்பு விற்பனையானது வாடிக்கையாளர்கள் தங்களது இல்லங்களில் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை மேம்படுத்த அருமையான வாய்ப்பை வழங்குகிறது. நவம்பர் 3-ம் தேதி வரை அனைத்து க்ரோமா விற்பனை நிலையங்களிலும், க்ரோமாவின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.croma.com லும் வாடிக்கையாளர்கள் ஈடு இணையற்ற சலுகைகளினால் பெரும் பலன்களை அனுபவிக்க முடியும். இந்த பண்டிகைக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, நாடு முழுவதிலும் பரவலாக இருக்கும் 500+ க்ரோமா விற்பனை நிலையங்களில் ஷாப்பிங் செய்யும் வாடிக்கையாளர்கள், தாங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருட்களுக்கும் உறுதியான பண்டிகைக் கால பரிசுகளைப் பெறத் தகுதியுள்ளவர்களாவர். மேலும், டிவி மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களில் வரம்பற்ற 10% உடனடி கேஷ்பேக் சலுகையும், பெரும் எண்ணிக்கையிலிருக்கும் ஸ்மார்ட்போன்கள் மற்றும் லேப்டாப்களுக்கு வரம்பற்ற 5% கேஷ்பேக் சலுகையும் வழங்கப்படுகிறட்து. இத்துடன், புதிய எலக்ட்ரானிக்ஸ் பொருட்களை வாங்கினால் 26,000 ரூபாய் வரை பரிமாற்ற பலன்களைப் பெறமுடியும்.

க்ரோமா இன்ஃபினிட்டி-ரீடெய்ல் லிமிடெட்டின் துணை தலைமை செயல் அதிகாரி திரு. ஷிபாஷிஷ் ராய் இந்த மாபெரும் பண்டிகை கால சிறப்பு விற்பனை குறித்து கூறுகையில், "எங்கள் ஃபெஸ்டிவல் ஆஃப் ட்ரீம்ஸ் பிரச்சாரத்தை மிகவும் உற்சாகத்துடன் தொடங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மேலும், எங்களது வாடிக்கையாளர்களுக்கு ஆச்சர்யமூட்டும் சலுகைகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், கூடுதலாக பல்வேறு வெகுமதிகளுடன் பண்டிகை கால ஷாப்பிங்கின் மகிழ்ச்சியையும் வழங்குகிறோம். ஒவ்வொரு குடும்பத்தின் பண்டிகைக் கொண்டாட்டத்தையும் ஏதாவது ஒரு வகையில் சிறப்பானதாக உயர செய்வதோடு, அவர்களின் பண்டிகை கால ஷாப்பிங்கை மறக்கமுடியாத அனுபவமாக மாற்ற வேண்டுமென்பதே எங்களது குறிக்கோள் ஆகும்" என்றார்.

இந்த பண்டிகை காலத்தில் 'பெஸ்டிவல் ஆஃப் ட்ரீம்ஸ்' சிறப்பு விற்பனையைக் கொண்டாட க்ரோமாவுடன் இன்றே இணையுங்கள். உங்களை ஆச்சர்யத்தில் ஆழ்த்தும் இன்னும் பல அற்புதமான சலுகைகளுக்கு இப்பொழுதே உங்களுக்கு அருகிலுள்ள க்ரோமா விற்பனை நிலையம் அல்லது www.croma.comஐக்கு சென்று ஷாப்பிங்கின் மகிழ்ச்சியான தருணங்களைக் கொண்டாடுங்கள்.

# களங்களில் இருந்து எதிர்காலங்கள் வரை: பெண் விவசாயிகள் வழிநடத்துவது எப்படி?



சென்னை, 15 அக் 2024: கிராமப்புற இந்தியாவில், பெண்கள் நீண்ட காலமாக விவசாயத்தில் முக்கிய பங்கு வகித்துவருகின்றனர், இருப்பினும் அவர்களின் பங்களிப்புகள் பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை. இன்று, புதுமையான பயிற்சி மற்றும் ஆதரவுத் திட்டங்கள் மூலம், பெண் விவசாயிகள் பொருளாதார மற்றும் சமூகத் தடைகளை உடைத்து தங்கள் சமூகங்களை நிலையான வளர்ச்சியை நோக்கி வழிநடத்திச் செல்கின்றனர். மகிளா கிசான் திவாஸ் தினத்தில், தடைகளைத் தகர்த்து விவசாயத்தில் மாற்றத்தை முன்னெடுத்துச் செல்லும் பெண் விவசாயிகளின் தளராத முயற்சிகளைப் போற்றிக் கொண்டாடுவோம். இந்த ஐந்து ஊக்கமளிக்கும் பெண்கள் தங்கள் சொந்த வாழ்க்கையை மாற்றியமைத்ததோடு மட்டுமல்லாமல், அவர்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு திறனளித்துள்ளனர், இது நேர்மறையான மாற்றத்தின் சிற்றலை விளைவை உருவாக்குகிறது. அவர்களின் கதைகள் தாங்குதிறன் மற்றும் சமூகத்தின் உருமாறும் சக்தியை எடுத்துக்காட்டுகின்றன, பெண்கள் வெற்றிபெறும் போது அடையக்கூடிய நீடித்த தாக்கத்தை வெளிப்படுத்துகிறது. கோகோ-கோலா இந்தியாவின் #ஷி டிபரன்ஸ் பிரச்சாரம், ஆனந்தனா, கோகோ-கோலா இந்தியா அறக்கட்டளையின் முன்முயற்சிகளால் ஆதரிக்கப்படுகிறது, பெண்கள் தங்கள் சமூகங்களுக்குள் அர்த்தமுள்ள மாற்றத்திற்கு வழிவகுப்பதன் மூலம் இந்த உணர்வை எதிரொலிக்கிறது. 1) பி. ரெஜினா: தமிழகத்தில் ஒரு சமூகத்தை புதுப்பிக்கிறார்

62 வயதில், தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த பி.ரெஜினா தனது சமூகத்திற்குள் திறனளிக்கும் இயக்கத்தை முன்னெடுத்து வருகிறார். 12 பெண்களைக் கொண்ட "வாகின்" சுயஉதவி குழுவின் தலைவராக, கேரட் மால்ட், பீட்ரூட் மால்ட் மற்றும் ஆம்லா மிட்டாய் போன்ற தாவர அடிப்படையிலான, கரிம பொருட்களின் உற்பத்தி மூலம் பலரது வாழ்க்கையை மாற்றியுள்ளார். ரெஜினாவின் தலைமையின் கீழ், இந்தக்குழு இப்போது ரூ. 30,000 கூட்டு மாத வருமானத்தை ஈட்டுகிறது, இது அவர்களின் நிதி நிலையை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், பகிரப்பட்ட கனவுகள் மற்றும் பரஸ்பர ஆதரவால் உந்தப்படும் வலுவான சகோதரத்துவத்தையும் உருவாக்குகிறது.

2) ராணி எச் பி: கூர்க்கில் ஒரு காபி பண்ணையாளரின் புரட்சி

கொடகின் ஹெரவநாடு அரச மரபில் வேரூன்றியுள்ள குறிப்பிடத்தக்க மீள்தன்மை மற்றும் மாற்றத்தை பிரதிபிப்பது ராணி எச் பி அவர்களின் கதையாகும். கணவரின் இறப்புக்குப் பிறகு, அவர் இரண்டு தசாப்தங்களாக உழைத்து தனது தரிசு நிலத்தை செழிப்பான காபி தோட்டமாக மாற்றியுள்ளார். அவரது இடைவிடாத கடின உழைப்புக்கு பலன் கிடைத்தது, காபி அறுவடையில் இருந்து நிலையான மற்றும் மரியாதைக்குரிய வருமானம் கிடைத்தது. ராணியின் வெற்றி, உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஆதரவு மற்றும் ஆனந்தனா-கோகோ கோலா இந்தியா அறக்கட்டளையின் பயிற்சித் திட்டங்களால் அவரது விவசாய நுட்பங்களைச் செம்மைப்படுத்த உதவியது. அவரது தலைமைத்துவத்தையும் அர்ப்பணிப்பையும் அங்கீகரித்து, கூர்க்கில் உள்ள ஈஸ்வர் இன் முன்முயற்சியான மடிகேரி ஹைலேண்ட்ஸ் ஃபார்மர்ஸ் ப்ரொட்யூசர்ஸ் கம்பெனி லிமிடெட் (எஃப் பி ஓ) க்கு போர்டு இயக்குநராக அவர் நியமிக்கப்பட்டார்.

3) சுவர்ணா: மண்புழு உரம் மூலம் கழிவுகளைக் காசாக்குகிறார்

கோண்டோலி கிராமத்தைச் சேர்ந்த ஒரு உறுதியான சிறு விவசாயியான சுவர்ணா, மண்ணின் வளத்தை அதிகரிக்கவும் ரசாயன உரங்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்கவும் மண்புழு உரத்தைப் உருவாக்கத் தொடங்கினார். நிபுணர் பயிற்சியாளர்களின் வழிகாட்டுதலின் பேரில், அவர் ஒற்றைப் படுகையில் 450 கிலோ மண்புழு உரத்தை வெற்றிகரமாக தயாரித்து, அவரது கரும்பு பயிர்கள் மற்றும் காய்கறி தோட்டங்களை கணிசமாக உயர்த்தினார். இந்த எளிய மற்றும் சக்திவாய்ந்த நடைமுறையானது அவரது குடும்பத்திற்கு பொருளாதார மற்றும் ஊட்டச்சத்து நன்மைகளை வழங்கியுள்ளது, மேலும் அவர்கள் தங்கள் சொந்த விளைபொருட்களை வளர்க்கவும் உட்கொள்ளவும் உதவுகிறது. 2022 இல் தொடங்கிய அவரது பயணம், சுவர்ணாவை ஒரு வளர்ந்து வரும் விவசாயி-தொழில்முனைவோராக மாற்றியது.

4) ப்ரீத்தி கிருஷ்ண குமார்: விவசாய வெற்றியை நோக்கிய ஒரு இளம் தாயின் பயணம்

வெறும் 24 வயதில், தேனியைச் சேர்ந்த ப்ரீத்தி கிருஷ்ண குமார், தாய்மை மற்றும் விவசாயம் ஆகியவற்றின் சமநிலையைப் பராமரிக்கிறார். தோட்டக்கலையை மையமாகக் கொண்ட பெண்கள் அதிகாரமளிக்கும் திட்டத்தில் அவர் சேர்ந்தபோது அவரது வாழ்க்கை பெரும் மாற்றத்தைக் கண்டது. மூன்று வருடங்கள் மற்றும் கிட்டத்தட்ட 50 பயிற்சி அமர்வுகளில், ப்ரீத்தி திராட்சை மற்றும் மிளகாய் பயிரிடத் தொடங்கினார், அதே நேரத்தில் வாழைத்தூள், திராட்சை பூசணி மற்றும் தினை தின்பண்டங்கள் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களையும் உருவாக்கினார். இந்த முயற்சி அவரது ஆண்டு வருமானத்தில் குறிப்பிடத்தக்க 53% அதிகரிப்புக்கு வழிவகுத்தது, இப்போது மாதந்தோறும் ரூ. 10,000 சம்பாதிக்கிறார். ஒரு விவசாயி மற்றும் தொழிலதிபராக அவர் புதிதாகக் கண்டுபிடித்த சுதந்திரம், அவரது குடும்பத்தின் எதிர்காலத்திற்கு பங்களிப்பதில் ஆழ்ந்த நோக்கத்தையும் பெருமையையும் அளித்துள்ளது.

5) பசந்தி: உத்தரகாண்டின் ஆப்பிள் பழத்தோட்டங்களில் வளத்தைக் கண்டறிந்துள்ளார்

உத்தரகாண்டின் மலைப்பகுதிகளைச் சேர்ந்த பசந்தியின் கதை நவீன விவசாய நுட்பங்கள் மற்றும் செயல்திட்ட ஆதரவின் மாற்றும் சக்தியைக் காட்டுகிறது. ஆனந்தனாவின் தலையீட்டின் மூலம், கோகோ-கோலா இந்தியா அறக்கட்டளையின் திட்டம் உன்னதி ஆப்பிள், சொட்டு நீர் பாசனம் மற்றும் இயற்கை நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது, அவரது ஆப்பிள் விளைச்சலை வியத்தகு முறையில் மேம்படுத்தியது. முன்பு ஒரு பருவத்திற்கு வெறும் ரூ.20,000 ஈட்டிய உருளைக்கிழங்கு விவசாயத்தில் இருந்து பாசந்தி இப்போது ரூ.3 லட்சம் வரை அவரது ஆப்பிள் தோட்டங்களிலிருந்து சம்பாதிக்கிறார். இந்த வெற்றி அவரது குடும்பத்தின் நிதி ஸ்திரத்தன்மையை உயர்த்தியது மட்டுமல்லாமல், பண்ணையில் ஒரு வீட்டுத் தங்கும் இடத்தைக் கட்டுவதற்கான அவரது இலக்கையும் ஈடேற்றியது.